ஓம்



ஸ்ரீ T. K. ராமா (Ex. M.L.A.)

ஸௌராஷ்ட்ர மத்ய ஸபை சார்பில் முன்னாள் தமிழ்நாடு சட்ட சபை உறுப்பினரும், மதுரை முனிசிபல் கௌன்ஸில் சேர்மனுமாகிய ஸ்ரீ T. K. ராமா அவர்களுக்கு அன்னார் நாட்டிற்கும் சமூகத்திற்கும் செய்த சேவைகளைப் பாராட்டி 10-2-1985ல் மதுரை ஸௌராஷ்ட்ர மேல்நிலைப் பள்ளியில் வழங்கப்பட்ட பாராட்டு மற்றும் பட்டமளிப்பு விழாவில் வெளியிடப் பெற்ற

'சுதந்திர ஸேவா ஸிரோமணி'

# மதுரை ஸ்ரீ T. K. ராமா அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஓம்

# தியாகச்செம்மல் ஸ்ரீ T. K. ராமா

"இறைவன் அருட்குடைக்கீழ் எல்லோரும் இன்ப
நிறைவுற்று வாழ்க நிதம்"

உயர்வு அற உயர்நலம் உடையவன் பரமபதநாதன்! அவ்வுயர் நலங்களில் இருந்து இறங்கி அவன் பல அவதாரங்கள் எடுக்கிறான். அவ்வப்போது மீனாக — மிருகமாக — மனிதனாகத் தாழ்ந்து வந்து தர்ம ஸ்தாபனம் செய்கின்றான். இது கதையன்று நமக்குக் காட்டப் பெற்ற நன்மார்க்கம்.

ஆம். சுயநலம் துறந்து, துன்பங்கள் தாங்கிப் பொது நலம் போற்று; அது தான் தவம்: என்று அருளுகிறார் திருவள்ளுவர். இந்தத் தவ வாழ்க்கை தான் காந்தியடிகளை மஹாத்மா ஆக்கியது. அவர் அடிச் சுவடு பற்றித் தம் வாழ்க்கையைத் தூய வேள்வியாக்கி நடப்பவர் மதுரை மாமனிதர் மேதகு ராமா அவர்கள். அவர் 19, 20 ஆகிய இரு நூற்றாண்டுகள் கண்டவர் இன்னும் ஒரு நூற்றாண்டு இரும் என்று சான்றோர்கள் யாவராலும் வாழ்த்தப்பெறும் தலைவர். அவர் நடந்து வந்த பாதை நாட்டுக்கு-சமுதாயத்துக்கு நல்லதொரு வழிகாட்டி அது சுருக்கமாக ஈண்டுப் படைக்கப் பெறுகிறது.

## பிறப்பு

*23-12-1898;* ஸ்ரீ ராமா அவர்களின் ஜன்மதினம். ஆம் இருபதாம் நூற்றாண்டு தொடங்குவதற்கு ஓராண்டு காலத்துக்கு முன்தான். புனிதம் நிறைந்த வரலாற்றுச்சிறப்புமிக்க-கோயில்நகரம் எனப் பெறும் மதுரையில் சாத்வீக நலம் சான்ற ஸௌராஷ்ட்ர மரபின் குல விளக்காகத் தோன்றினார். இவர் பெற்றோர் ஜாபாலி கோத்ரம் திருக்கொண்டா கிருஷ்ணமாச்சாரி துளசியம்மாள் ஆவர். தந்தையார் பொன் நகை செய்யும் தொழில் கொண்டவர் ஆனால் போதும் என்ற மனமே பொன் எனக் கொண்டவர். அவருக்குத் தலைமகனாக — தவமகனாகப் பிறந்தவர் ராமா. நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் என்பார்களே அவ்வாறு வளர்ந்து தீராத விளையாட்டுப் பிள்ளையாகப் பெற்றோரை

மகிழ்வித்தார். சிறந்த ஒரு வேதாந்தியாக இருந்த, இவர் தந்தை இவரைத் தம்முடன் பிரம்மானந்த மடத்துக்கு அழைத்துச் சென்று வேதாந்த பாடம் கேட்பதுண்டு. அந்தப் பிஞ்சு உள்ளத்தில் அன்று விதைக்கப் பெற்ற ஆன்மிக விதை, இன்று புதுவை அரவிந்த ஆச்ரம வாசம் ஆக விளைவு தந்துள்ளது.

**இளமையும் கல்வியும்**

நல்ல பழக்க வழக்கமாகிய கல்வி இவருக்கு வீட்டிலேயே பெற்றோர்களால் வழங்கப் பெற்றது. தக்க வயது வந்ததும் முறைப்படி அட்சராப்பியாசம் பெற பள்ளிக்கு அனுப்பப் பெற்றார் ஆரம்பப்பள்ளித் தேர்ச்சிக்குப் பின் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப் பெற்றார். ‘விளையும் பயிர் முளையிலே தெரியும்’ என்று ஒரு பழமொழி உண்டே! அது இவருக்கு உரிமையானது. பள்ளியில் இவர் வெறும் புத்தகப் புழுவாக இருக்க விரும்பவில்லை

‘கற்க கசடற கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக’,

என்னும் திருக்குறள் நெறியை ஏற்றார். சுவாமி விவேகானந்தரின் நூல்களைப் படித்தார். அதன் விளைவாக உடலினை உறுதி செய்யும் தேகப் பயிற்சிகளில் நாட்டம் கொண்டார். பிறர்க்குத் தொண்டு செய்வதின் பெருமை கண்டார். ‘சாரணர் படை’ முதலான இயக்கங்களில் பங்கு கொண்டார். அன்னிபெசண்டு அம்மையார் முதலான அறிஞர் நூல் பல படித்தார். நாட்டு நிலையை நன்கு உணர்ந்தார். S.S.L.C. தேர்ச்சியோடு இவர் பள்ளிப்படிப்பு முற்றுப் பெற்றது.

**திருமணம்**

அந்தக்காலத்தில் ஸௌராஷ்ட்ர சமூகத்தில் பிள்ளைகளுக்கு இளம் வயதில் திருமணம் முடிப்பதை ஒரு சிறப்பாகக் கொண்டிருந்தார்கள். நம் ராமாவுக்கு 18வயதில் 1917ஆம் ஆண்டில் திருமணம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. மதுரை புளியடி பால்சாமி அய்யர் திருமகளார் பத்மாவதி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியராகக் கைத்தலம் பற்றினர் — பார்த்தாவுக்கு

ஏற்ற பதிவிரதையாகத் துணை நலம் அமைய இல்லறம் நல்லறமாகச் சிறந்து விளங்கியது. காலப்போக்கில் மூன்று புதல்வர் நான்கு புதல்வியரைப் பெற்ற பெருங்குடும்பயாக — பெருமை பெற்ற குடும்பமாகப் பரிணமித்தது.

## அரசியல் ஆர்வம்

பாரத நாடு பழம்பெருநாடு — பாருக்குள்ள நல்ல நாடு என்று இருந்த நிலை மாறி வையத்து நாட்டுள் எல்லாம் தாழ்வுற்று நின்றது. வறுமை மிஞ்சியிருந்தது. சுதந்திரம் நீங்கிப் பாழ்பட்டுக் கிடந்தது பாரததேசம். அதை வாழ்விக்க வந்தார் காந்தியடிகள் அவர் சொல்லும் செயல்களும் ஸ்ரீ ராமாவைக் கவர்ந்தன அவர் படித்து வந்த நூல்களும் சிந்தனையைக் கிளர்ந்தன. அக்காலத்து அரசியல் மேடைப் பேச்சுகள் தரம் வாய்ந்தவை. உள்ள நிலைமையை உள்ளவாறு படம் பிடித்துக் காட்டுவதுபோல் அமைந்து மனத்தைத் தொடக்கூடிய நிலையில் பேசும் ஆற்றல் வாய்ந்த பல தலைவர்கள் இருந்தனர், அத்தகைய சேலம் ஸ்ரீ P வரதராஜுலு நாயுடு போன்றோர்களின் பிரசங்கங்களை விருப்பமுடன் நாடிச் சென்று ஸ்ரீ ராமா கேட்டுவரலானார். ஸ்ரீ திலகரின் ஹோம் ரூல் இயக்கம் ஆங்கிலேய ஆட்சியின் ரவுலட் சட்டம், ஜாலியன் வாலா தோட்டப் படுகொலை ஆகியவை இவருடைய தேச பக்திக் கனலை மிக வளர்த்துவிட்டன.

## விடுதலை இயக்க ஈடுபாடு

நாட்டுக்குத் தொண்டு செய்யும் நாட்டம் ஸ்ரீ ராமாவின் உள்ளத்தின் மூண்டெழுந்தது. 1932ல் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்தார். தீவிர உறுப்பினரானார். மதுரை மாவட்டத்தில் சிறந்த தொண்டராகத் தலைவர்களால் போற்றப் பெற்றார் பிரச்னைகளை அணுகு முறையிலும் முறையான நிர்வாகத்திலும் இவருக்கு இருந்த தனி ஆற்றலை அன்றைய மதுரைப் பெருந் தலைவர்களான திருவாளர்கள் ஜார்ஜ் ஜோசப், வைத்தியநாத அய்யர், N.M.R. சுப்புராமன் ஆகியோர் நன்கு உணர்ந்து

பாராட்டினர். பெரிய பெரிய பொறுப்புகள் இவரிடம் ஒப்புவிக்கப் பெற்றன.

**சிறைவாசம்**

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமைப் பிரகடனத்தை செயல்படுத்திக் கர்மவீரர் எனப் பெயர் பெற்றவர் ஸ்ரீ. ராமா வேதாரண்யத்தில் உப்புச் சத்யாக்ரகம் நடைபெற்றது. அதற்கு மதுரையிலிருந்து தொண்டர்களைத் தேர்ந்து எடுத்து அனுப்பும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கண்ணியமும் கட்டுப் பாடும் மிக்க 200 தொண்டர்களை இவர் பயிற்றுவித்துத் தேர்ந் தெடுத்தனுப்பினர். 1930 ஜூலையில் மதுரையில் கள்ளுக்கடை மறியல் நடைபெற்றது. பல தொண்டர்களுடன் இவரும் அதில் தீவிரமாகக் கலந்து கொண்டார் அதனால் இவர் 26-7-1930ல் கைது செய்யப் பெற்றார். மதுரை, திருச்சி, பெல்லாரி அலிப்புறம் கேம்ப் ஜெயில்களில் சிறை வைக்கப் பெற்று 15-3-1931ல் விடுதலை யானார்.

1932ல் காங்கிரஸ் கமிட்டி2ன் சட்ட விரோத ஸ்தாபனங்கள் என்று பிரகடனம் செய்யப்பட்டது. அப்போது காங்கிரஸ் மாநாடு நடத்திச் சட்டமறுப்பு இயக்கத்தை முடுக்கிவிட்டதாக இவர் மீது குற்றம் சுமத்தப் பெற்றது. அதனால் இவர் கைது செய்யப் பெற்று மதுரை மாவட்டச் சிறையிலும் கண்ணனூர் சிறையிலுமாக ஆறுமாத கால தண்டனை விதிக்கப்பெற்றார்.

1942ல் இவர் மதுரை நகரசபை அங்கத்தினராக இருந்தார். 'இரண்டாவது உலக மகாயுத்தத்துக்கு நகர சபை ஒத்துழைப்பு நல்காது — காங்கிரஸ் தீர்மானத்தை ஒட்டி பிரிட்டிஷ் அரசு இந்தியாவை விட்டு வெளியேறி விட வேண்டும்' என்று ஒரு தீர்மானம் இவரால் கொண்டுவரப் பெற்றது. அது ஏகமனதாக் நிறைவேற்றப்பட்டது. அதன் காரணமாக மதுரை நகரசபை கலைக்கப்பெற்றது. மகாத்மாகாந்தி 'வெள்ளையனே வெளியேறு' என்னும் போராட்டம் தொடங்கியிருந்தார். மதுரையில் மிகச் சிறப்பாக இப்போராட்டம் வெற்றி பெறச் செய்த வேலைகளை

யெல்லாம் திரு ராமா உன்னிப்பாகக் கவனித்து நடத்தினர் இதனால் இவர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பெற்று ஒன்றேகால் ஆண்டு சிறைவாசம் அனுபவித்தார்.

## அறப்போராட்டங்களில் அவர் பங்கு

அந்நிய ஆட்சிக்கு எதிராக அந்தக் காலத்தில் நடந்த போராட்டங்களைப் பற்றி மக்கள் சரியாக அறியமுடிவதில்லை செய்திகள் பெரிதும் இருட்டடிக்கப்பெற்றன. பத்திரிகைகளும் இன்றுபோல அவ்வளவு பரவலாக இல்லாமலிருந்தன. நேற்றைய போராட்டம் எப்படியிருந்ததோ? எத்தனைபேர் சிறைப்பட்டனரோ? அவர் என்ன ஆனர்? இவர் என்ன ஆனர் என்று மக்களிடம் ஆவலாதி பரந்திருக்கும். 1932 ஆம் ஆண்டு போராட்ட வேகம் அப்படியிருந்தது சைகிளோஸ்டைல் செய்யப்பட்ட செய்தித் துண்டுப்பிரசுரங்கள் எப்படியோ பொதுமக்களுக்கு விநியோக மாகும். அவைகளைத் தயாரிப்பது யார்? சைகிளோஸ்டைச் செய்வது யார்? விநியோகிப்பது யார்? என்பதெல்லாம் மர்ம மாகவே இருக்கும் போலீசார் சிலரைச் சந்தேகப்பட்டு பிடித்துச் செல்வர் — விசாரிப்பர்-ஏமாற்றமடைவர்-விட்டுவிடுவர் இவ்வளவு ரகசியமாகவும் கட்டுப்பாடாகவும் தினமும் இந்த வேலையைச் செய்து வந்த ரகசியத் தொண்டர்களின் மூலபுருஷர் ஸ்ரீ T.K. ராமா ஆவார். தேசியத் தொண்டர்கள் அரசாங்கத்தின் மிருகத் தனமான அடக்குமுறைகளைத் துச்சமாகக் கருதி நடத்திய இந்தச் சேவை அவருடைய அரிய திறமைக்கு ஒரு பெரிய சான்றாகும் தவிர போராட்ட காலங்களில், அவைகளில் கலந்து கொள்ளும் தொண்டர்களுக்கு வேண்டிய உதவிகள், பராமரிப்பு வேலைகள் முதலியவற்றைக் கவனிக்கும் பொறுப்பும் திரு ராமாவினிடம் ஒப்படைக்கப் பெற்றிருந்தது. அவர்களுக்கான நிதி சேகரிக்கும் வேலையையும் அவரே கவனித்தார். சைமன் கமிஷனை எதிர்த்து நடத்திய போராட்டத்தின் போது இவா நேரடியாகக் களத்தில் குதித்தார். அப்போது அவரும் மற்றும் பல தியாகிகளும் போலிசாரால் துப்பாக்கி சுட்டியால் குத்தப்பெற்றுத் தள்ளப் பட்டனர். போராட்டங்களில் நேரடியாக ஈடுபட்டதைவிட

அதிகமாக இவர் மறைந்திருந்து, போராட்டங்கள் தொடர்ந்து நீடித்து வெற்றிகரமாகச் செயல்பட ஆற்றிய தொண்டுகள் வியக்கத்தக்கவையாகும்.

### பதவிகள் பெருமை பெற்றன

சிதையின் தோற்றத்தால் பெண்மையும் பெண்களுக்குரிய நாணமும் தவப் பெருமை பெற்றன என்று கம்பர் கூறுவார். அது போல் இவரால் பல பதவிகள் பெருமைபெற்றன. ஆம்! உலகில் சாதாரணமாக பலரும் பதவிகளால் பெருமைபெறுவார்கள் ஆனால் இவர் நிலை அதற்குமாறாக விளங்கியது. இவர் வகித்தமையால் அந்தப் பதவிகள் பெருமை பெற்றன. தமிழ் நாடு காங்கிரஸில் 1932 முதல் 1950 முடிய அங்கம் வகித்தார். அகில இந்திய காங்கிரஸ் உறுப்பினராக ஐந்தாண்டு காலம் இருந்தார் மதுரை அர்பன் ஜில்லா, காங்கிரஸின் முதல் தலைவர் இவரேயாவர். 1934ல் தமிழ்நாடு காங்கிரஸின் பிரசித்திபெற்ற திருப்பரங்குன்றம் சிறப்புக் கூட்ட தொடரில் திரு. T.K. இராமா காரியதரிசியாக இருந்து சிறந்த பணியாற்றினார் 1948ல் மதுரை நகர சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அரசாங்கத்துடன் வழக்காடி நகரவைக்கு நிரந்தரமாக, பலலட்சம் ரூபாய் வருவாய் தரும் மின்துறையைக் காத்தார். சென்னை ஆந்திர, கேரள மாநில நகரவைத் தலைவர்கள் கழகம் நிறுவி அதற்கும் தொடர்ந்து ஐந்தாண்டு காலம் தலைவராக இருந்து தனிப் பெரும் பணியாற்றினார்.

1952ல் நடந்த முதல் பொதுத் தேர்தலில் ஸ்ரீ T. K. ராமா மதுரை தெற்குத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டசபைக்கு M. L. A. ஆகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். முக்கியமான பல வாரியங்களில் அங்கம் வகித்து நாட்டுமக்களுக்கு நன்மை பல செய்தார்.

### சுதந்திரப் போராட்ட வீரத்தியாகிகள் சங்கம்

சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட மதுரை ஜில்லா தியாகிகள் சங்கத்துக்கு முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்

பெற்றவர் ஸ்ரீ ராமா ஆவார். மேற்கொண்ட பணியைத் திறம்பட நிறைவேற்றும் இயல்பினை இயற்கையாகப் பெற்ற இவர் எல்லா தியாகிகளுக்கும் குடியிருப்பு நிலப்பட்டா, மாநில, மத்திய அரசு உதவித்தொகை முதலியவைகளை வாங்கிக்கொடுத்தார். பதவிப் பொறுப்பு இல்லாத காலத்திலும் கூட தியாகிகளுக்கு இன்றளவும் உரிய சலுகைகளைப் பெற்றுத் தருவதில் தம்மாலான உதவிகளைச் செய்தும் வழிவகைகளைக் கூறியும் வருகிறார்.

## காதி, கிராமத் தொழில் வளர்ச்சிப் பணி

நெசவுத் தொழிலாளர் மரபில் வந்த ஸ்ரீ ராமா அவர்களுக்கு காதி மற்றும் கிராமத் தொழில்களில் நல்ல பரிச்சயமும் ஈடுபாடும் இயல்பாக அமைந்திருக்கிறது. அதனால் அவர் பல அகில இந்திய கதர் கண்காட்சிகளில் பங்கு கொண்டு பணியாற்றினார். மதுரையில் அவரே இரண்டு முறை காதி கண்காட்சிக்கு ஏற்பாடு செய்து நடத்தினார். கதர்த் தொழிலில் புதிய புதிய ரகங்களை (டிசைன்)யும் பட்டு ஜரிகை முதலியன கலந்த வேலைப்பாடு மிக்க துணி வகைகளையும் இவர் தயாரிக்கச் செய்தார். கதர் விற்பனை பெருக வழிவகை செய்தார். இவ்வாறு ஸ்ரீ டி. கே. ராமா சிறந்த ஓர் ஆக்கப் பணியாளராகவும் திகழ்கின்றார்.

## சமூகப் பணிகள்

ஸ்ரீ ராமா இளமை முதலே சமூகப் பணிகளில் மிக்க ஆர்வமும் ஊக்கமும் காட்டி வருகிறார். மதுரை சமூக நல சங்கத்தில் இவர் 1937 முதல் சிறந்த தொடர்பு கொண்டிருக்கிறார். மதுரையில் பொது நல வசதிகள் பலவற்றிற்கும் காரணமாக இருந்தவர் இவரே ஆவார். அனாதைக் குழந்தைகளுக்கு ஆதரவாக இவர் 'பாலமந்திரம்' நிறுவினார். ஐந்து ஏக்கர் நிலத்தில் ரூ. 75000/- செலவில் சிறந்த கட்டிடம் அமைப்பித்தார் அன்றைய சென்னை மாட்சிமைதங்கிய ஆளுநர் (கவர்னர்) அவர்களைக்கொண்டு திறந்து வைக்கச் செய்தார். நூற்றுக்கணக்கான அனாதைக் குழந்தைகள் இன்று இதன் மூலம் தக்க பயன்பெற்று வருகின்றனர்.

அடுத்துக் குறிப்பிடத்தக்க ஸ்ரீ ராமா அவர்களின் அருந் தொண்டு, 'மீனாட்சி சதனம்' நிறுவியதாகும். இது சமுதாயத்தில்

குடும்பத்தில் இருந்து வாழ இயலாத பெண்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகும். ஆதரவற்ற பெண்கள் மட்டுமன்றி பெண் விசாரணைக் கைதிகளும் இங்கு தங்கி உதவிபெறலாம். அரசு மான்ய உதவியுடன் இது பராமரிக்கப் பெற்று வருகிறது. இதை நிறுவி இதன் முதல் காரியதரிசியாக இயக்கி விட்டவர் ஸ்ரீ ராமா ஆவார்.

தமிழக அரசின் 'ஹாண்ட்லூம் போர்டில்' பல்லாண்டுகள் இவர் அங்கம் வகித்தார். அதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கும் மாஸ்டர் வீவர்களுக்கும் பலவகையில் இவரால் நல்லபல உதவிகள் கிட்டின: மதுரையில் நூற்றுக்கணக்கான பவர் லூம்களுக்கு நீண்டகாலமாகக் கிடைக்காமலிருந்த லைசென்ஸை இவர் வாதித்துப் போராடி வாங்கித் தந்தார்.

ஓய்வு நேரத்தில் பெண்கள் வீட்டிலிருந்தே ஓரளவு சம்பாதிக்க 'பெண்கள் கைத்திறன் ஜமுக்காளம் சங்கம்' ஏற்படுத்தினார். சங்கத்திலிருந்து பெண்களுக்கு ஜவுளிகளைத் தந்து ஜமுக்காளம் கட்டி வரச்செய்தார். அதனால் கணிசமான ஒரு வருவாய் குடும்பத்தில் கூடுவதற்கு வழி காட்டினார்.

கூட்டுறவுத்துறையிலும் ஸ்ரீ ராமா மகத்தான சேவை செய்துள்ளார். பல புதிய கூட்டுறவுகளைத் தொடங்க உதவினார். கூட்டுறவுத் துறையில் மதுரை மாவட்டத்திற்கு மட்டுமே ஆன ஒரு விசேஷ வசதியை அரசிடமிருந்து பெற்றுத் தந்துள்ளார். கிரெடிட் அண்டு மார்கெட்டிங் சொசைடி' என்ற பெயரால் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தி கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் அரசிடமிருந்து குறைந்த வட்டிக்குக் கடன் பெற வகை செய்துள்ளார். இன்றளவும் இச்சங்கம் நல்ல பயன் தந்து வளர்ந்து வருகிறது. மாநில கூட்டுறவு நெசவாளர் சங்கத்திலும் ஸ்ரீ ராமா அங்கம் வகித்துப் பல நன்மைகளை ஆக்கியுள்ளார்.

சாரணர் இயக்கத்திலும் இவர் சாலச்சிறந்த பங்கு பணி ஆற்றியுள்ளார். 'பாரத் ஸ்கவுட்ஸ் அண்டு கைட்ஸ் அஸோஸியேஷன்' உபதலைவராகச் சிறந்த சேவை செய்தார்.

தமுக்கம் மைதானத்தில் நடந்த ஒரு தனி விழாவில் 'நல்ல சாரணர்க்கு' வழங்கப்பெறும் 'மெடலை' இவர் மேதகு கவர்னர் விஷ்ணுராம் மேதி அவர்களிடமிருந்து பெற்றார்.

**தாமிர பட்டயம்.**

*1972ல் இந்தியத் தலைநகர் டில்லி மாநகரில் மத்திய அரசின் சார்பில் 25வது சுதந்திரதின வெள்ளி விழா கொண்டாடப் பெற்றது. அவ்வமயம் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சாகசம் பல புரிந்து சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளான தியாகிகள் கௌரவிக்கப் பெற்றார்கள். அவ்விழாவிற்கு தியாகி ஸ்ரீ T. K. ராமாவும் அழைக்கப்பெற்று 'தாமிர பட்டயம்' வழங்கப் பெற்றார்.*

**பண்பு நலன்கள்.**

ஸ்ரீ ராமா யாவராலும் அன்புடன் விரும்பப்பெறும் இனிய சுபாவம் உடையவர். மக்களுக்குத் தம்மாலான உதவியை எந்நிலையிலும் செய்யத் தயங்காதவர். துன்பத்தைக்கண்டு தளராதவர். மகாத்மா காந்தி, மூதறிஞர் இராஜாஜி போன்ற பெருந்தலைவர்களுடன் நெருங்கிப்பழகியவர். அதனால் அவர்களுடைய பெருங்குணங்களைத் தழுவி நிற்பவர். புகழ்ச்சியை விரும்பாத புனித உள்ளமுடையவர் ஸ்ரீ ராமா. நிமிர்ந்து நேரே செருக்குடன் வளரும் நெற்பயிர், நெல்மணிகள் பால் பிடித்து முற்றியவுடன் தலைசாய்ந்து நிற்கும். அது போல் அறிவு சான்ற பெருமக்கள் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையராக இருப்பர். 'பணியுமாம் என்றும் பெருமை' என்பதற்கு உதாரண புருஷர் ஸ்ரீராமா என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. அவருடைய இன்றைய நடைமுறை வாழ்வு இதை உள்ளங்கை நெல்லிக்கனி என விளக்குகிறது

**பெருவாழ்வு**

வாழ்க்கையில் ஒருவன் பெறக்கூடிய பெருஞ்செல்வம் நிலபுலம் இல்லை — பணம்காசு இல்லை — வீடு வாசல் இல்லை — அறியவேண்டுவன அறிந்து ஒழுக்கமாக நடக்கும் பிள்ளைகளை

அடைவது தான் பெருஞ்செல்வம் என்று பொய்யாமொழிப் புலவர் என்று பெயர் பெற்ற திருவள்ளுவர் கூறுவார். அந்தப் பெருஞ் செல்வத்தை — பெருவாழ்வை ஸ்ரீ ராமா பெற்றுள்ளார். இவருடைய மூத்த மகன் ஸ்ரீ டி. ஆர். துளசிராம் 1968ஆம் ஆண்டு முதல் புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தின் ஆன்மீகப் பணியில் தம்மை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். இந்த யோக வாழ்க்கை அனுபவத்தின் விளைவான ஆராய்ச்சியின் பயனாக சுமார் 2000 பக்க அளவில் ஆங்கிலத்தில் ஓர் அரிய நூலை ஆக்கியுள்ளார். 'அருட்பெருஞ்சோதியும் மரணமில்லாத தேகமும்' என்பது அந்த நூலின் பெயர். அருட்பெருஞ்சோதி இராமலிங்க சுவாமிகள், ஸ்ரீ அரவிந்தர், மஹாயோகி திருமூலர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் ஆன்மீக யோக அனுபவங்களை ஒப்பு நோக்கும் (Comparative Study) பெருநூல் இதுவாகும். இதனை சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்று 1981ல் வெளியிட்டுள்ளது ஸ்ரீ ராமா அவர்களின் இளைய மகன் ஜவகர்லால் சிறந்த ஆடிட்டராக இருந்து குடும்ப நலம் காத்து வருகிறார். பல பேரன், பேர்த்திமார்களைப் பெற்ற பெருங் குடும்பமாக ஆல்போல் தழைத்துள்ளது இவர் குடும்பம்

ஜேஷ்ட புத்ரன் சிறந்து விளங்கும் அதே அரவிந்த ஆச்ரமத்தில் ஸ்ரீ ராமா அவர்களும் சென்ற நான்கு வருட காலமாக ஆச்ரமவாசியாகி யோக வாழ்க்கை மேற்கொண்டுள்ளார் தினசரி சூரிய நமஸ்காரம், பிராணயாமம் பிரார்த்தனை, தியானம், ஸ்ரவணம், ஸத்ஸம்பாஷணை ஆகிய வரன்முறை வாழ்க்கை அமைத்துக்கொண்டு சிந்தையெல்லாம் சிவமயமே என்னும்படி விளங்குகின்றார்.

**ஸௌராஷ்ட்ர சமூக முன்னேற்ற வழிகாட்டி**

ஸ்ரீ டி. கே. ராமா அவர்கள் ஸௌராஷ்ட்ர மஹாநாடுகள் அனைத்திலும் கலந்து கொண்டு சமூக முன்னேற்றத்துக்கு அரிய பல ஆலோசனைகளை அவ்வப்போது சொல்லி வழிகாட்டி வந்துள்ளார். ஸௌராஷ்ட்ர சமூகம் கல்வியில், பொருளாதாரத்தில்

பின்தங்கிய சமூகமே என்று அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கல்விச் சலுகைகள் முதலியன தொடர்ந்து பெறுவதற்கு ஸ்ரீ ராமா பெரும் பிரயாசை மேற்கொண்டு அரிய சாதனை புரிந்தவர் ஆவார். ஸௌராஷ்ட்ர மத்ய சபை தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை மத்ய சபை சிறந்த பணியாற்றும் வகையில் நல்லபல ஆலோசனைகளைக் கூறி வருகிறார்.

## மங்கலப் பாராட்டு

ஊர் வாழத்தாம் வாழும் உத்தமர் ஸ்ரீ டி. கே. ராமா, தம் வாழ்வால் தாம் பிறந்த சமூகத்துக்கும் பிறந்த மண்ணுக்கும் மாபெரும் நன்மைகளை உண்டாக்கியுள்ளார். இத்தகைய பெருங்குலச்செல்வரைத் தக்கவகையில் பாராட்ட ஸௌராஷ்ட்ர மத்ய ஸபையார் தீர்மானித்துள்ளனர்.

ரக்தாக்ஷி ஆண்டு தைத்திங்கள் 28ஆம் நாள் (10-2-1985) ஆகிய புனித நன்னாளில் மதுரை ஸௌராஷ்ட்ர பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஸ்ரீ ராமா அவர்களின் தேசிய, சமுதாய சேவைகளைப் பாராட்டிப் பட்டம் வழங்க ஸௌராஷ்ட்ர மத்யஸபைத் தலைவர் **N. V. G. B, ராஜாராம்** அவர்கள் தலைமையில் மாபெரும் விழா நடைபெற்றது. அவ்வமயம் மதுரை ஸௌராஷ்ட்ர கல்லூரித் தலைவர் **ஸ்ரீ K. L. N. கிருஷ்ணன்** அவர்கள் ஸ்ரீ ராமா அவர்கள் வாழ்க்கை வரலாற்று நூலை வெளியிட்டார். முதல் பிரதியை இராமநாதபுரம், ஜுடிஷியல் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் **ஸ்ரீ R. தனஞ்ஜெயம்** அவர்கள் பெற்றுக் கொண்டார். **ஸ்ரீ A. G. சுப்புராமன் M. P.** அவர்கள் ஸ்ரீ ராமா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். ஸௌராஷ்ட்ர மத்ய ஸபை முன்னாள் தலைவர் ஸ்ரீ என். எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீ ராமா அவர்களுக்கு **'சுதந்திர ஸேவா ஸிரோமணி'** என்ற சிறப்புப் பட்டம் வழங்கிப் பதக்கம் அணிவித்தார். பாராட்டு பத்திரமும் வாசித்தளித்தார். தேசிய

ஸமூக, ஆன்மீகப் பெரியோர்கள் பலர் வாயார, மனமார ஸ்ரீ ராமா அவர்களை வாழ்த்திப் பாராட்டினார்கள்.

எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீ பிரஸன்ன வெங்கடேஸ்வர ஸ்வாமி ஸ்ரீ T. K. ராமா அவர்களுக்கு நிறை நலமும், நீடிய ஆயுளும் வழங்கியருளவும், ஸ்ரீ ராமா அவர்கள் என்றும் இளமையாக விளங்கிப் பேரானந்தப் பெருவாழ்வு பெறவும் அனைவரும் பிரார்த்திப்போம்.

சுபம்


**இந்த புத்தகம் வெளியீடு:**

## ஸௌராஷ்ட்ர மத்ய ஸபை

**தலைமை**

ஸௌராஷ்ட்ர மத்ய ஸபைத் தலைவர்
ஸ்ரீ N.V.G.B. ராஜாராம் அவர்கள்

**முன்னிலை**

ஸௌராஷ்ட்ர மத்ய ஸபை முன்னாள் தலைவர்
ஸ்ரீ N.M.R. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
ஸ்ரீ A.G. சுப்புராமன் M.P. அவர்கள்

**வெளியிட்டவர்**

மதுரை ஸௌராஷ்ட்ர கல்லூரித் தலைவர்
ஸ்ரீ K.L.N. கிருஷ்ணன் அவர்கள்

முதல் பிரதியை பெற்றவர்
இராமநாதபுரம் ஜுடிஷியல் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ்
ஸ்ரீ R. தனஞ்ஜெயன் அவர்கள்

உ

ஸ்ரீ ராமஜெயம்

# ஸௌராஷ்ட்ர மத்ய ஸபை

1, முனியப்பன் கோவில் தெரு,
நாகல்நகர், திண்டுக்கல் - 624 003.
(Regd. S. No. 35 of 1972)

## நிர்வாகஸ்தர்கள்

### தலைவர்

N. V. G. B. ராஜாராம
111, N. V. G. B. டாக்கீஸ் ரோடு,
நாகல் நகர், திண்டுக்கல் - 624003.
போன் : 5498, 3624 மதுரை : 44182, 44124, 43799

### உப-தலைவர்கள்

பஜ்ஜீ. K. R. ராஜமன்னார்சாமி அய்யர்
1691, ஸௌராஷ்ட்ர 2வது தெரு,
மானம்புச்சாவடி தஞ்சாவூர் - 613 001 போன் : 542

A. S. ரெங்காச்சாரி
148, அம்மாபேட்டை மெயின் ரோடு,
சேலம் - 636 001 போன் : 65479

S. S. சுப்ரமணியன் D. E. E.,
30, சிவன் கோவில் மேலரத வீதி
பாளையங்கோட்டை - 617 002 போன் 4800

### பொக்கிஷதார்

S. K. லெட்சுமி நாராயணன்
4/112, பாரதியார் ரோடு, எமனேஸ்வரம்,
பரமகுடி - 623 707 போன் ; 262.

### காரியதரிசிகள்

V. M. U. சுப்புராம்
37-A, ஸௌராஷ்ட்ரபுரம்
நாகல்நகர், திண்டுக்கல் - 624 003 போன் : 4733 P.P.

R. M. கோபாலாச்சாரி
2/66, காமராஜர் தெரு,
திருநகர், மதுரை - 625 006 போன் : 8493